
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



**காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்**

*Vol:8 Issue :30 April 2026*
கோட்டை:8 வாயில்:30 ஏப்ரல் 2026

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief
**Dr PRIYAKRISHNAN**

Publisher
**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members
**Dr V SELVAKUMAR**
Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**
School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**
Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**
Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**
Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**
Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**
Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்
இதழாக்கம்
திரு ப. ஜெயகிருஷ்ணன்
முதன்மை ஆசிரியர்
முனைவர் பிரியாகிருஷ்ணன்
+917299587879
www.aranejournal.com
aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# மாணிக்கவாசகரின் இறையின்பப் பேறு

# *Manikkavasakarin Iraiyinbapperu*

அ.தீபா, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்,செந்தமிழ்க் கல்லூரி,மதுரை - 625001.

*A. Deepa, Research Scholar, nSenthamizh College, Madurai* - 625 001.

*நெறியாளர் : முனைவர் கோ.சுப்புலட்சுமி ,துணை முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை -625 001*

*Dr. K.Subbulakshmi, Vice Principal , Senthamil College , Madurai*-625 001.

**ஆய்வுச்சுருக்கம்**

*ஆன்மிகத்தில் பல்வேறு வகையான மார்க்கங்கள் கடைப்பிடிக்கப்பட்டாலும், அதன் இலக்கு இறைவன் தான். மனிதன் இறைவனை நோக்கிச் செல்ல இயலாமல் தடுப்பது இந்த உடல் மீதும், உலகின் மீதும், கொண்ட பற்றுகளே. இந்தப் பற்றுகளை முழுவதும் நீக்கிய ஒருவனுக்கு முத்திநிலை என்னும் இறையின்பப்பேறு வாய்க்கப்பெறும். அவ்வகையில் உலக வாழ்வை நாடி வாழ்வதே நன்னெறி என்று வாழ்ந்த மாணிக்கவாசகர், திருப்பெருந்துறையில் தனக்குக் கிடைத்த இறைக்காட்சி தொடர்ந்து கிடைக்கப்பெறாமைக்குக் காரணம் தான் கொண்ட பற்றுகளே என்பதை உணர்ந்து அவற்றை எல்லாம் நீக்கி இறைவன் திருவருளாலேயே இறையின்பம் பெற்று, வீடுபேறு வாய்க்கப்பெற்றார்.*

**திறவுச் சொற்கள் :** முத்திநிலை, பரம்பொருள், மெய்ஞ்ஞானம் , தன்னை உணர்தல், அத்துவிதம்

## *Abstract*

*"Even though various paths are followed in spirituality, the ultimate goal is God. It is the attachment to this body and the world that prevents a human from progressing towards the Divine. One who completely relinquishes these attachments will attain the bliss of liberation (Mukthi). In this regard, Manikkavasagar, who initially lived believing that seeking worldly life was the virtuous way, realized that his own attachments were the reason he could not continuously experience the divine vision he received at Thirupperunthurai. By removing those attachments through the grace of the Lord, he attained divine bliss and reached the state of salvation (Veeduperu)*

***Key Words:*** *Salvation, The Almighty, Spiritual Wisdom , Self Awareness, . Non-Duality*

**முன்னுரை:**

உலகப் பொருட்களில் ஆன்மா அழுந்துவது உலக இன்பமாகும். அது போல, இறைவனின் உணர்வோடு ஒன்றி விடுவது ஆன்மாவின் பேரின்பமாகும். இவற்றை ‘‘இறையின்பப் பேறு’’ என்றும், ‘‘சிவப்பேறு’’ என்றும், ‘‘முத்திநிலை’’ என்றும் கூறலாம்.

முத்திநிலையானது ‘‘வீடு பேறு பெறுதல்’’ என்னும் பொருளையும் குறித்து நிற்கும். இச்சொல்லானது வீடு, பேறு என்னும் இரு பொருள்களை உடையது. பற்றுகள் அனைத்தையும்

நீக்கிவிட வேண்டும். சிவனின் அருளைப் பெற வேண்டும் என்பது இதன் பொருளாகும். எங்கும் நிறைந்த பரம்பொருளாம் சிவபெருமானின் திருவருட்பேறு பெற்றவர் மாணிக்கவாசகர். இவர் அருளிய திருவாசகக் கவிதைகளில் சுட்டப்படும் இறையின்பப்பேறு என்னும் "முத்திநிலை" குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**1. முத்திநிலை**

சாதனங்களால் உயிர்கள் அடையும் பயன்கள் இரண்டு. ஒன்று "பாச நீக்கம்" மற்றொன்று "சிவப்பேறு". அதாவது சித்தாந்த சைவ முத்தியை அடைதல் என்பது பொருள். உயிர்கள் அடைய வேண்டிய முடிந்த பயன் வீடுபேறு ஆகும்.

இம்முத்திநிலையை அடைவதற்கான "மெய்ஞ்ஞானம்" மனத்தை அலைக்கும் "பெருநோய்"அகன்ற பின்னரே தோன்றுகிறது. இப்பெருநோய் எது என்பதை வள்ளுவர்,

"காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்"[1]

(குறள் எண் : 360)

எனும் குறட்பாவழி விளக்குகிறார்.

வாழ்வில் உயிர்களுக்கு ஏற்படுகின்ற அறிவு, அனுபவம், இறைவழிபாடு, இல்லறம் இவை அனைத்தும் இந்நோயை அகற்றுவதற்கு ஏற்படுத்தப்பட்ட வழிமுறைகளாகும். இதற்கு முதற்படி "தன்னையறிதல்" ஆகும். இதனை,

"தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னையறியாமல் தானே கெடுகிறான்
தன்னை யறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந்தானே"[2]

(திருமந்திரம் — பா : 2355)

என உரைக்கின்றார் திருமூலர்.

நோயைத் தெரிந்து அதை நீக்கிய பிறகு, தான் யார் என்று உணர்கையில் பிறப்பதே "மெய்ஞ்ஞானம்" "தவ வாழ்க்கை".

இத்தவமே முத்திநிலை எனப்படும் பேரின்ப நிலையைப் பெறச் சிறந்த வழியாகும். முத்திக்குச் சாதனம். ஞானம் இந்த ஞானத்தின் சாதனம் சரியை, கிரியை, யோகம் முதலான

தவங்களாகும். உயிர்கள் அடைவதற்குரிய முடிந்த பயம் வீடுபேறு ஆகும். வீடுபேறு என்பது துன்பத்திலிருந்து நீங்கி இன்பத்தைப் பெறுவதாகும்.

பாசப்பற்றிலிருந்து விடுபட்டுத் துன்பமற்று இருத்தலே முடிவான முத்திநிலையாகும். இதற்கு இறைவனின் திருவருள் அவசியமாகும்.

“சிவகதி, சிவலோகம், சிவபுரம், வீடு பேறு, சிவப்பதம், அறியாப்பதம்” முதலான பல சொற்களால் முத்தியை விளக்குகின்றது சைவ சித்தாந்தம். சிவபெருமான் தனக்கு அளித்த இப்பேரின்ப நிலை குறித்து மாணிக்கவாசகர் தம் பாடல்களில் பல இடங்களில் விதந்தோதுகின்றார். இதனை,

“மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்”(3)

(திரு.வாச.சிவ.புரா.பா.அடி — 32)

“சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட

அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேன்” (4)

(கண்டபத்து — பா 1 : 3 - 4)

எனும் பாடலடிகளால் அறியலாம்.

மாணிக்கவாசகர் இறைவன் தமக்கு அளித்த சிவப்பேறு குறித்துப் பரவசமுற்று இத்தகைய பெருங்கருணைத் திறத்தினை என்னைத்தவிர யார் பெறக்கூடும், என எண்ணி

“முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்

பக்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்

சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட

அத்தன் எனக்கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே” (5)

(அச்சோப்பதிகம் — பா : 1)

என்று வியந்து போற்றுகின்றார்.

**2. திருவடி அடைதல்:**

இறைவன் திருவடி அடைதல் என்பது வீடுபேறு அடைதல் ஆகும். மாணிக்கவாசகர் தமக்கு சிவப்பேறு எப்போது கிட்டியதோ அப்போதே பிறவிப்பிணியும் இல்லாமல் போகின்றது என்கிறார்.

“இப்பிறவி ஆட்கொண்டினிப் பிறவா மேகாத்து” (6)

(தி.வா-திருஅம்மானை — பா : 12)

"மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன்

கழற்கே புகுமாறும்" (7)

(தி.வா-குழைத்த பத்து — பா : 9)

என்ற பாடலடிகளால் இறைவனின் திருவடிகளை ஏத்துதலைக் காணலாம்.

மாணிக்கவாசகர் சிவப்பேறு பெறுவதற்குக் கையாண்ட நெறி எளிமையான நெறி - அன்பு நெறி - அதுவே பத்தி நெறியாகும். இந்நெறியினை அவருக்கு அறிவித்தவன் இறைவனே. "பக்திநெறி அறிவித்து" என்னும் திருவாசகத் தொடரால் இதனை அறியலாம்.

உலகப் பற்றினை நீக்கி இறைவழியில் நின்று, அவன் அருளாலேயே திருவருள் பெற்று, சிவப்பேறு அடைவதற்கே உயிர்கள் விழைய வேண்டும் என்பதனை,

"அவனருளாலே அவன் தாள் வணங்கி" (8)

(தி.வா — சி.புரா — பா.அடி: 18)

என்ற பாடலடிகளால் மாணிக்கவாசகர் விளக்குகிறார்.

மாணிக்கவாசகரைப் போன்று, இறையனுபவத்தில் ஊறித்திளைத்த வள்ளலார். இறைவனின் பெருங்கருணையையும் திருவருள் திறத்தினையும்,

"நினைந்து நினைந்து உணர்துணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்தன்பே

நிறைந்து நிறைந்தூற் றெழுங் கண்ணீரதனால் உடம்பு.

நனைந்து நனைந்து அருளமுதே நன்னிதியே ஞான

நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று

வனைந்து வனைந்து ஏத்துதும் நாம்" (9)

(திருவருட்பா — பாடல் : 5576)

என்ற பாடலடிகளால் ஏத்துகின்றார்.

***3. அணைந்தோர் தன்மை:***

இறைவன் சிந்தனைக்கு அப்பாற்பட்டவன்; எனவே, அவனை மாயா காரியங்களாகிய கருவி, கரணங்களைக் கொண்டு அறிதல் இயலாது. இக்கருவிகளிலிருந்து நீங்கியவர்களாலேயே இறைவனைக் காண இயலும். கருவிகளிலிருந்து நீங்கி அவனைக் கண்டோர் பின்பு கருவிகளோடு

கூடி உலகத்தோடு தொடர்பு கொள்ளும் காலத்திலும், இறைவனைக் காண இயலும். அவ்வாறு கண்டு வழிபடுவோரே “சீவன் முத்தர்”அல்லது “அணைந்தோர்” எனப்படுவர்.

சீவன் முத்தர்கள் எனப்படும் அணைந்தோர் நன்மையையும், தீமையையும் சமமாக எண்ணுபவர்கள். அவர்கள் நன்மைக்காக மகிழ்ச்சியையும், தீமைக்காக வருத்தமும் அடையாதவர்கள். உள்ளத்தில் சிவத்தை அறிந்த சீவன் முத்தர்களைக் கூரிய வாள் கொண்டு துன்புறுத்தினாலும், சந்தனமாய் பூசி மகிழ்வித்தாலும், தலையிலே உளியை நாட்டி இறக்கினாலும் கூட அவையெல்லாம் சிவபெருமான் விதித்த வழியே நடைபெறுவன என எண்ணித் தம் இயல்பில் எப்போதும் மாறாதிருப்பர், இக்கருத்தினை,

“செத்திலென் சீவிலென் செஞ்சாந் தணியிலென்
மத்தகத் தேயுளி நாட்டி மறிக்கிலென்
வித்தகன் நந்தி விதிவழி யல்லது
தத்துவ ஞானிகள் தம்மை குன்றாரே” (10)

(திருமந்திரம் — பா : 2847)

என்ற திருமந்திரப் பாடல் தெளிவுறுத்துகின்றது.

சீவன் முத்தர்கள் பாலரைப் போல, உன்மத்தரைப் போல, பேய் போல உலகிலே திரிவர். ஏனெனில் அவர் தேக தர்மம் கடந்தவர். அவர்களது செயலை யாரும் அறிய மாட்டார்கள். இதனை,

“நாடவர் நம்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப” (11)

(திருப்பொற்.சுண் — பா : 7)

எனும் பாடலடிகளால் விளக்குவார் மாணிக்கவாசகர்.

அணைந்தோர்க்குக் கருவி கரணங்களெல்லாம் பேரின்பத்தை நுகர்வதற்கு உரிய கருவிகளாய் நிற்கும். இன்ப-துன்பத்தை அனுபவிக்கையில் அதனைத் தம் செயலாகவோ, பிறர் செயலாகவோ கருதாமல் முதல்வனது செயலாகவே காண்பதால் அவர்களுக்குப் பேரின்பமே விளையும் என்பதனை,

“காணும் கரணங்கள் எல்லாம் பேரின்பமெனப்
பேணும் அடியர் ...” (12)

(பண்டாண நான்மறை — பா : 6)

என வரும் திருவாசகம் பகுதியால் உணரலாம்.

### 4. இறையடியார்களின் சிவப்பேரின்பம்

இறையருளால் ஞானம் பெற்ற அடியார்களின் அனுபவங்கள் குறித்து, மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார். இறை அடியார்க்கு அடியவனாக இருப்பதையே அவர் விரும்புகிறார். இத்தகு இறையின்பத்தைத் தமக்கும் அருளுமாறு இறைவனிடம் வேண்டுகின்றார். இறையோடு தன்னை இணைத்துக் கொள்ளுமாறு புலம்புகின்றார். சிவனடியார்கள் பெற்ற இறை அனுபவத்தைத் தாமும் பெறவே விழைகின்றார்.

"புகுவேன் எனதே நின்பாதம்
போற்றும் அடியாருள் நின்று நகுவேன்" (13)

(அனுபோகசுத்தி — பா : 10)

"அப்பன் ஆண்டு தன் அடியரில்
கூட்டிய அதிசயம் கண்டோமே" (14)

(தி.வா.அதிசயப்பத்து — பா :1)

"பாசமானவை பற்றறுத்து உயர்ந்ததன்
பரம்பெருங் கருணை யால்" (15)

(அற்புதப்பத்து — பா : 8)

என வரும் பாடலடிகளின் மூலம் தாம் எப்போதும் சினடியார் திருக்கூட்டத்துள் ஒருவராக இருக்க வேண்டும் என்ற தன் வேட்கையைப் புலப்படுத்துகிறார்.

இறை அருளால் மலம், மாயை, இன்பங்களின் பிணைப்பு நீங்கிய பொழுதே அவற்றுடன் நிகழும் இவ்வுணர்வுகளும் சிறிது சிறிதாகத் தேயும் என்பதனை,

"வான்கெட்டு மருதம் மாய்ந்தழநீ மண்கெடினும்
தாம் கெட்டலின்றிச் சலிப்படையாத் தன்மையனுக்கு
ஊன் கெட்டு உயிர்கெட்டு உணர்வு கெட்டென் உள்ளமும் போய்.
நான் கெட்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ"? (16)

(திருத்தெள்ளேணம் — பா : 18)

என்ற பாடல்வழி தெளியலாம்.

சிவானந்தம் பெற்றவர்களுக்கு உற்றாரும், வேற்றாரும் இல்லை. சிந்தைக்குத் தெளிவைக் கொடுத்துத், தன்னில், தன்னருளில் இணைப்பது இறைவனின் பெருங்கருணையே ஆகும் என்பார் மாணிக்கவாசகர். மேலும், இறையின்பம் பெற்றோர் சிவசொரூபம் பெறுகின்றனர் என்றும், தமது சீவசொரூபத்தை இழக்கின்றனர் என்றும், இறை அன்பர்கள் சூழ்ந்த சபையில் தம்மைச்

சேர்க்குமாறும், எப்போதும் அடியாரோடு தம்மை இணைத்து வைத்திருக்குமாறும் இறைவனை வேண்டுகிறார்.

**5. மாணிக்கவாசகரின் இறையின்பப்பேறு**

மாணிக்கவாசகர் தம்மைப் பற்றியுள்ள. பசு, பாசங்களை அறுத்து இறைவனின் திருவடிகளில் தம்மைச் சேர்த்துக் கொண்டதையும், அவ்வாறு தமக்குத் திருவடி நல்கித் தம்மைச் சிவமாக்கி ஆட்கொண்டதையும்,

*"பத்திமையும் பரிசும் இலாப் பசுபாசம் அறுந்தருளிப்*

*பித்தன் இவன் என என்னை ஆக்குவித்துப் பேராமே*

*சித்தம் எனும் திண்கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த*

*வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே" (17)*

*(கண்ட பத்து — பா : 7)*

என்ற பாடலின் வழி தெளிவுறுத்துகின்றார்.

மேலும், தான் அறியாமையால் அழுந்திக்கிடந்ததையும், இறைவன் பெருந்துறையில் காட்சி தந்து அருளியதையும், இறைக்காட்சி கிடைக்கப் பெற்றும் தான் அதை உணராமல் இருந்ததையும், எண்ணி வருந்துகின்றார்.

சிவபெருமான் அறியாமையிலிருந்த தம்மை விடுவித்துப் பாவச்சுமையை நீக்கி ஆனந்தப் பேற்றினை அளித்தான் என்பதனை,

*"அளவிலாப் பாவத்தால் அழுக்குண்டிங் கறிவின்றி*

*விளைவொன்றும் அறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனுக்கு*

*அளவிலா ஆனந்தம் அளித்தென்னை ஆண்டானைக்*

*களவிலா வானவரும் தொழுந்தில்லைக் கண்டேனே" (18)*

*(கண்டபத்து — பா : 8)*

என்ற பாடலின் வழி குறிப்பிடுகின்றார்.

மாணிக்கவாசகர் தமக்குக் கிட்டிய சிவப்பேறு மன்பதைக்கும் கிடைக்க வேண்டும் என்ற தம் பெருங்கருணைத் திறத்தினை,

*"புகழ்மின்! தொழுமின்! பூப்புனைமின்!*

*புயங்கள் தாளே புந்தி வைத்திட்டு*

இகழ்மின் எலலா அல்லலையும்

இனியோர் இடையூறு அடையலாமே

திகழும் சீரார் சிவபுரத்துச்

சென்று சிவன்தாள் வணங்கிநாம்

நிகழும் அடியார் முன்சென்று

நெஞ்சம் உருகி நிற்போமே'' (19)

(யாத்திரைப்பத்து — பா : 6)

என்ற பாடலில் பதிவு செய்கின்றார்.

மாணிக்கவாசகர் இறைவன் தமக்கு அடியமையாக ஆட்கொண்டு ஒளிநெறி அனுபவம் தந்து அவனே தமக்குக் கதியாக அமைந்தும், அருள் இல்லாமல் தன்னைப் பிரிந்தான் என்றும் கூறி வருந்துகின்றார்.

இறை அனுபவத்தில் மூழ்கிப் பற்றுகளை விட வேண்டும் என்றே எண்ணுகின்றார். உலக வாழ்வினை நாடி வாழ்வதே நன்னெறி என எண்ணி இருந்தேன். அது சிறு நெறியென எனக்கு உணர்த்திப் பேரருள் அளித்தவன் ஈசன். அவனைச் சேருவதே ''பெருநெறி'' என்றும், பரமனே ஆதியும், நடுவும், அந்தமும் இல்லாமல் சிதம்பர இரகசியமாய் இருப்பவன் என்பதை,

''நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்

சிறு நெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணம்

குறி ஒன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்கு

அறியும் வண்ணம் அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே'' (20)

(அச்சோப் பதிகம் — பா : 2)

என்ற பாடலின் மூலம் புலப்படுத்துகின்றார்.

மேலும், இறைவன் தன் பாசங்களை அறுத்து உய்யும் வழியைக் காட்டி, ஓங்காரத் தத்துவத்தை உணர்த்திய உத்தமன் என்கிறார்.

''.......

உய்யும்நெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை

ஐயன்எனக் கருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே'' (21)

(அச்சோப் பதிகம் — பா : 7)

என்றும் தாம் அருள் பெற்ற திறத்தினை வியந்து போற்றுவதோடு, பத்தி பூணுதலும், அருளைச் சார்ந்திருத்தலும் அதற்குரிய உபாயங்கள் என்பதையும் இப்பாடலின்வழி விளக்கி உரைக்கின்றார்.

**நிறைவுரை**

சாதனங்களால் அடையும் பயன்களில் தலையாயது சிவப்பேறு. அவற்றை அடையும் உயிர்களைக் கொண்டு, இறைவன் அவற்றோடு ஒன்றாகவும், வேறாகவும், உடனாகவும் இருக்கும் நிலையாகிய அத்துவிதம் என்பது முத்தி நிலையாகிய சிவப்பேறிலும் உண்டு.

இம்முத்திநிலையை இவ்வுலகத்தில் இருந்து கொண்டே அடைந்தவர்கள் அணைந்தோர் அல்லது சீவன்முத்தர்கள் எனப்படுவர். இத்தகு அடியார்களோடு கூடியிருத்தல் கூட இறைவனை அடைய உதவும் வழியாக மாணிக்கவாசகர் எண்ணுகிறார். மேலும் இறைவன் குருவடிவில் வந்து தன்னை ஆட்கொண்ட திறத்தினை எண்ணி வியந்து போற்றுகின்றார் என்பன போன்ற கருத்துகளை இக்கட்டுரையின் வழி அறிய முடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**


1. அருள் அம்பலவாணர் .சு திருவாசக ஆராய்ச்சியுரை
   பாரி நிலையம்
   184, பிராட்வே, சென்னை-18.
2. ஆனந்தராசன் .ஆ திருவருட்பயன் வழித்துணை விளக்கவுரை
   அருள்நந்திசிவம் அருட்பணி மன்றம் வெளியீடு
   78, செல்வி நகர், சிந்து பூந்துழை
   திருநெல்வேலி-627001.
3. ஊரன் அடிகள் திருவருட்பா முதல் ஐந்து திருமுறைகள்
   (பதிப்பாசிரியர்) இராமலிங்கர் பணி மன்றம்,
   31, போயஸ் தோட்டம், சென்னை-86.
4. கதிரேசன் செட்டியர்.மு திருவாசகம் நீத்தல் விண்ணப்பம்
   சன்மார்க்க சபை, மேலவாசல்புரி.
5. சரவண முதலியார் .அ.மு அமுது அடி அடைந்த அன்பர்
   மணிவாசக மன்றம், அரியலூர்

முதற்பதிப்பு, 1956.

6. சுப்பிரமணியம்பிள்ளை.க மணிவாசகப் பெருமான் வரலாறு
திருநெல்வேலி சைவ சித்தாந்த
நூற்பதிப்புக் கழகம்,
திருநெல்வேலி & சென்னை,
முதற்பதிப்பு, 1952.

*BIBLIOGRAPHY*

1 *Arul Ambalavanar. R* *Thiruvasaga Araichiyurai*
*Paaru Nilayam*
*184 Broadway, Chennai — 18*

2 *Anandarasan M* *Thiruvarutpayan Vazhithunai Vilakkavurai*
*Arulnithisivam Arutpani Mandram Veliyeedu*
*78, Selvi Nagar, Sinthu Poonthulai*
*Thirunelveli — 627 001.*

3 *Ooran Adigal [Pathippu Asiriyar]* *Thiruvarutpa Muthal Ainthu Thirumuraigal*
*Ramalingar Pani Mandram,*
*31 Poyas Thottam, Chennai - 86*

4 *Kathiresan Chettyar. MU.* *Thiruvasagam Neethal Vinnappam*
*Sanmaarkka Sabai, Melavasalpuri*

5 *Saravana Muthaliyar A. MU.* *Azhuthu Adi Adaintha Anbar*
*Manivasaga Mandram, Ariyaloor*
*First Edition = 1956*

| | | |
|---|---|---|
| 6 | *Subramaniam Pillai Ka.* | *Manivasaga Peruman Varalaru*<br>*Thirunelveli Saiva Siddantha Noor Pathippu Kazhagam,*<br>*Thirunelveli* & *Chennai*<br>*First Edition* - 1952 |

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com